தயவு

# அருட் பெருஞ்ஜோதி

## பிரார்த்தனை

சத்திய ஞான கோட்டம்
1—1—1984

தயவு

# அருட்பெருஞ்ஜோதி பிரார்த்தனை

— சரவணனந்தா

வெளியீடு,
அருட்பெருஞ்ஜோதித்தயவு ஆலயம்
வள்ளலார் நகர்
திண்டுக்கல் - 3.
1984

# முன்னுரை

அருட்பெருஞ் ஜோதியாய் எங்கும் நிறை கடவுள், நம் அனுபவத்தின் பொருட்டு எழுந்தருளிஉள்ள இடம் நமது சிரநடுப் பகாபீடம். இங்கிருந்து நம் எண் சாண் உடம்பில் நிறைந்து, தன் தயவு ஒளியை நாற்றிசைகளிலும் பரப்பிக் கொண்டு உள்ளார் அருள் ஆண்டவர்.

இந்த உண்மைதான் இன்று, 1-9-8-4 ஆகிய, 1984-வது ஆண்டின் பிறப்பாகக் காண்கின்றோம். காண்கின்றதோடு, அகத்தே இருந்து அனகமாக வாழவே பிரார்த்தனையை என்றும் செயல் படுத்துவோமாக.

சத்தியஞானகோட்டம்
திண்டுக்கல்
1—1—84

— சரவணானந்தா

தயவு

# அருட்பெருஞ் ஜோதி

## அருட்பெருஞ் ஜோதி தனிப்பெருங் கருணை

# அருட்பெருஞ் ஜோதி

### பிரார்த்தனை.

சத்திய ஞான சபையிலே, அருட்பெருஞ்ஜோதிக்காட்சியை வழங்கிய தோடு, இதுசமயம்இந்தநம் அருட்பெருஞ் ஜோதித்தயவு ஆலயத்திலே எழுந்தருளி யுள்ள தனிப்பெருந் **தயவுக் கடவுளே.** உலகம் எல்லாம் தயாநேயத்தால் ஒத்து வாழ்ந்து, உயர் இன்பில் தழைத்து ஓங்கத் தயவு செய்தல் வேண்டும்!

தயவுத்தெய்வமே, ஒன்றுகிய நீயே ஒவ்வொருவரின் அக ஆன்மாவாயும், அகப்புற உயிர் ஆற்றலாயும், புற உடல்

உருவாயும் தோற்றியுள்ளதை உள்ளிருந்து உணர்த்தஉணர்ந்து, ஓர்உரிமைச் சகோதரர்களாய் அறிந்துள்ளோம். இது கொண்டு வாழத் தயவுசெய்!

இதுவரை தயவுக்கடவுள் உண்மையை அறியாது, புலன் இச்சை மிகுதியாலும். தேகபோகப் பற்ருலும், வேண்டுதல் வேண்டாமையாலும் எப்படி எப்படியோ நிலையற்ற இன்ப துன்ப வாழ்விலே எவ்வளவு அவத்தைப்பட்டு அழிந்து அழிந்து வீண்போனேம்!

நலம்பெறக்கருதி, எத்தனை எத்தனை மெய்ஞ்ஞான, விஞ்ஞான, உலகியல் சாத்திரங்களையும் கற்று, சமய மதக்

கொள்கை கோட்பாடுகளால் தெய்விக வாழ்வு பெற பற்றொடு முயன்றோம்; முயன்று கொண்டும் இருக்கின்றோம்.

இவைகளுக்கெல்லாம் ஆதார அருட் பரம்பொருளாய் உள்ள ஒன்றான தயவுக் கடவுளாய் உனைக்கண்டு நிற்கின்றோம் இந்த அருட்பெருஞ்ஜோதி சன்னிதியிலே. எல்லோருக்கும் எல்லா நன்மையும் அருளி வாழ்விக்கும் உண்மைப் பொருளாய் அறியப்படுவது நீயே என்பது தெளிவு.

எவரின் தலைநடுவுள்ளும் இருந்து ஒளிரும் உன்னையன்றோ. சிவ முதலான அகச்சமய தெய்வங்களாகவும், மற்ற, எல்லாப்புறச்சமய தெய்வங்களாகவும்,

வேறு வேறு நாமரூப. சக்தி, சித்திக ளோடு விளங்குவனவாய்க் கண்டு போற்றி அடைந்த பேறு உலகறியும்!

பக்குவ மெய்அறிவுகொண்டு. மெய்ப் பொருளைக்காணாது அபக்குவத்தால், வேற்றுமைத் தோற்றப்பற்றுகாரணமாக இதுவரை தயாஒருமை உரிமைகொண்டு வாழாது பாழ்பட்டது போதும், இறைவா தயை புரி!

கடவுள் ஒரே ஒருவர் என்பதும், அவரே தனது உண்மையை ஒவ்வொரு வரின் உள்ளத்தும் சிறிது சிறிதாக வெளியாக்கிவந்து, முடிவிலே, மனித வடிவிலே, தன் முழு இயலும்வெளியாக்

கிக்கொண்டுநித்திய ஆனந்தவாழ்வோடு திகழவருகின்றார்என்பதுஉண்மையாகும்.

சர்வ வல்லமையுள்ள நிறைஇன்பக் கடவுள் ஒருவரே என்றென்றும் உள்ள வர் ஆவர், அப்படியுள்ள நித்திய பரன் தானே. பலகோடிகோடி மக்களாய்ப் புற உலகில் தோற்ற, மாற்ற மறைவு ஆகிக் கொண்டுள்ளதும் மெய்யே. இன்று தனிப்பெருந்தயவு ஆக ஒவ்வொருவரின் அகமிருந்துஅனகமாகநிறைந்துவிளங்க வரும்போதும் அவர் ஒருவரே பலராய் மரணமிலாப் பெருவாழ்வுடன் திகழ உள்ளதும் சத்தியமே!

எனவே மக்கள் சமுதாயம் முழுமைக்கும் இத்தயவு மூலம் பெரிய நிலைத்த இன்ப வாழ்வு உண்டாகப் போகின்றது உண்மையாகும். ஆகையால் இந்தஅருட் பெருஞ்ஜோதித் தயவு ஆலயத்தையும், தயவுப் பதியையும் உளம்கொண்டு நல் வாழ்வு பெற வேண்டுவோம்.

தயவே, தயவு பாலி!